**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 30.11.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்* ()

*சி பி இராதாகிருஷ்ணன்* (6)

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் இன்று அரியானாவில் உள்ள குருஷேத்ராவிற்கு பயணம் மேற்கொண்டார். இந்த பயணத்தின் போது அவர், அங்குள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் 20 ஆவது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். தொடர்ந்து, சர்வதேச கீதை மகோற்சவத்தின் ஒரு பகுதியாக அகில பாரதிய தேவஸ்தான சம்மேளனத்திலும் பங்கேற்றார்.

*மன் கீ பாத்* 1 (10)

நாட்டின் வேளாண் துறையில் 357 மில்லியன் டன் உணவு பொருட்கள் உற்பத்தி செய்து வரலாற்று சாதனை படைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் 128 ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில் அவர் இன்று காலை உரையாற்றினார். நவம்பர் 26 ஆம் தேதி இந்திய அரசியலமைப்பு சட்ட தினம், வந்தே மாதரத்தின் 150 ஆண்டுகள் நிறைவு தினம் மற்றும் நவம்பர் 25 ஆம் தேதியன்று அயோத்தியின் ராமர் கோவிலில் தர்மக் கொடி

ஏற்றப்பட்ட தினம் ஆகியவை குறித்து பிரதமர் நினைவு கூர்ந்தார். பிரதமரின் மன் கீ பாத் உரையில் இருந்து சிறு தொகுப்பு......

**(வாய்ஸ்)**

*மன் கீ பாத்* 2 (16)

(வாய்ஸ்)

மனதில் முனைப்பு இருந்தால், சமூக சக்தியின் துணையோடு தோல்வி அடைந்தாலும், மீண்டெழுந்து செயல்பட்டால் வெற்றி பெறுவது சாத்தியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். இஸ்ரோ அமைப்பின் ட்ரோன் போட்டி தொடர்பாக நமது தேசத்தின் இளைஞர்கள் செவ்வாய் கோள் போன்ற இடங்களில் ட்ரோனை இயக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது பெருமைகுரியது என்றும், சந்திரயான் -3 ன் வெற்றிப் பயணம் உற்சாகமும், நம்பிக்கையையும் தருகிறது என்றும் பிரதமர் கூறினார். அரியானாவின் குருஷேத்ரத்தில் மகாபாரத போரின் சம்பவங்களை முப்பரிமாண ஒலி-ஒளி காட்சியாகவும், டிஜிட்டல் மூலமாகவும் கண்டு தாம் பெருமிதம் அடைந்ததாகவும் பிரதமர் கூறினார். குருஷேத்திரத்தின் பிரம்ம சரோவரில் ஏற்பாடு செய்திருந்த சர்வதேச கீதை மகோற்சவத்தில் தாம் பங்கேறது மிக சிறந்த அனுபவமாக இருந்தது என்றும், இந்த மகோற்சவத்தில் ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் பங்கேற்றது பெருமைக்குரிய தருணம் என்று தெரிவித்தார். தொடர்ந்து பேசிய பிரதமர், இயற்கை வேளாண்மை பற்றிய ஒரு பெரிய மாநாட்டில் பங்கேற்க

*மன் கீ பாத்* 3 (17)

கோயம்பத்தூர் சென்றிருந்ததை நினைவுகூர்ந்தார். இயற்கை வேளாண்மை தொடர்பாக நடைபெற்ற முயற்சிகளும், அதில்

இளைஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் விவசாயிகளோடு தாம் உரையாடியதையும் விளக்கி கூறினார். மேலும், இயற்கை வேளாண்மை என்பது பாரதத்தின் பண்டைய பாரம்பரியங்களின் அங்கமாக திகழ்ந்து வருவதாகவும், பூமி தாயை காப்பதற்கு அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். காசி தமிழ் சங்கமத்தின் 4 ஆம் பதிப்பு டிசம்பர் இரண்டாம் தேதி காசியின் நமோகாட்டில் தொடங்க உள்ளதை தெரிவித்த அவர், இந்த தமிழ் சங்கமத்தின் கருப்பொருள் **தமிழ் கற்கலாம்** என்றார். புதிய கற்றல், புதியவர்களோடு பழகுதல் போன்றவை இந்த காசி தமிழ்சங்கமத்தின் முக்கிய அங்கமாக விளங்கும் என்றும், காசி தமிழ் சங்கமத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். **தமிழ் கலாச்சாரம் உயர்வானது- தமிழ் மொழி உயர்வானது- தமிழ், இந்தியாவின் பெருமிதம்** என்பதை பிரதமர் வலியுறுத்தினார். தொடர்ந்து பேசிய பிரதமர், நாட்டின் பாதுகாப்பு அமைப்பிற்கு பலம் கிடைத்திருக்கிறது என்றும், கடந்த வாரம் மும்பையில் ஐஎன்எஸ் மாகே போர்க் கப்பல் இந்திய கடற்படையோடு



இணைக்கப்பட்டது குறித்து தாம் பெருமைக் கொள்வதாக தெரிவித்தார். மாகே என்ற போர்க்கப்பலின் பெயர் வரலாற்று பாரம்பரியம் இருக்கும் ஒரு இடத்தின் பெயர் என்பதால், புதுச்சேரி மற்றும் மலபார் கரையோர பகுதி வாழ் மக்கள் இதன் பெயர் குறித்து மகிழ்ச்சி அடைந்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். இந்திய கடற்படை மிக விரைவாக தற்சார்பு நிலையை நோக்கி முன்னேறி வருவது குறித்து நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டும் என்றும், டிசம்பர் 4 ஆம் தேதியன்று கடற்படை தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி, நமது வீரர்களின் அளவில்லா கடின உழைப்பை கவுரவப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். விளையாட்டு துறையில் இந்திய ஐசிசி பெண்கள் அணி உலக

கோப்பையை வென்றது, டோக்கியோவில் நடைபெற்ற கேட்டல் குறைபாடு உடையோருக்கான ஒலிம்பிக் பந்தயங்களில் 20 பதக்கங்களை வென்று சாதனை படைத்தது, கபடிக்கான உலக கோப்பையை வென்று வரலாறு படைத்தது, உலக குத்து சண்டை போட்டிகளில் நமது வீரர்கள் 20 பதக்கங்களை வென்றது, மகளிர் பார்வை திறன் குன்றியவர்களுக்கான கிரிக்கெட்டில், உலக கோப்பையை வென்றது போன்ற பல்வேறு சாதனைகள் குறித்து பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

*அனைத்து கட்சி கூட்டம்* (17)

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் நாளை தொடங்க உள்ளதை ஒட்டி, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ இன்று அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். புதுடெல்லியில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமை தாங்கினார். கூட்டத்தில் 36 அரசியல் கட்சிகளை சேர்ந்த 50 தலைவர்கள் பங்கேற்றனர். கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய திரு கிரண் ரிஜிஜூ, கூட்டம் நேர்மறையான சூழ்நிலையில் நடைபெற்றதாக கூறினார். மேலும், குளிர்கால கூட்டத் தொடரின் போது இரு அவைகளும் சுமுகமாக நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் அவை தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக தெரிவித்தார். இந்த அமர்வின் போது தற்காலிகமாக 14 சட்டமன்ற மற்றும் பிற விவகாரங்கள் விவாதிக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார். நாளை தொடங்கி, டிசம்பர் 19 ஆம் தேதி வரை நடைபெறும் இந்த குளிர் கால கூட்டத் தொடரில், அணுசக்தி மசோதா 2025, காப்பீடு சட்ட திருத்த மசோதா, தேசிய நெடுஞ்சாலை சட்ட திருத்த மசோதா உள்ளிட்ட பல்வேறு மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

*மோடி* 1(16)

ராய்பூரில் நடைபெற்ற காவல்துறை இயக்குநர்கள் மற்றும் காவல் துறை ஆய்வாளர்கள் மாநாட்டின் நிறைவு நாள் விழாவில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமை விருந்தினராக பங்கேற்றார். இம்மாநாட்டில், இந்தியாவின் பாதுகாப்பு அமைப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவான விவாதங்கள் நடைபெற்றதாகவும், தேசிய பாதுகாப்பு துறையில் புதுமைகளை பகிர்ந்து கொள்ள இந்த மாநாடு முக்கியத்தளமாக செயல்படுகிறது என்பதையும் பிரதமர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். நவா ராய்பூரில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில், சிறந்த சேவைக்கான குடியரசு தலைவரின் காவல் பதக்கத்தையும், பிரதமர் வழங்கினார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், மற்றும் பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களை சேர்ந்த காவல் துறை இயக்குநர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர். இந்த மாநாட்டின் கருப்பொருள் **விக்சித் பாரதம் – பாதுகாப்பு பரிமாணங்கள்** என்பதாகும். புதிய யுக சவால்களுக்கு எதிராக நாட்டு மக்களை பாதுகாப்பதற்கான அடுத்த கட்ட பாதுகாப்பு கட்டமைப்புகளை உருவாக்குவதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

மோடி 2(6)

மேலும் இடதுசாரி தீவிரவாதம், பயங்கரவாத எதிர்ப்பு, பேரிடர் மேலாண்மை, பெண்கள் பாதுகாப்பு, காவல்துறையில் தடயவியல் அறிவியல், மற்றும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துதல் உள்ளிட்ட முக்கிய பிரச்சனைகள் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன.

வானிலை 1 (18)

வங்க கடலில் நிலவும் டிட்வா புயல் வட தமிழகம் மற்றும் புதுச்சேரி கடல் பகுதியில் இருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் வட தமிழகம், புதுச்சேரி கடல் பகுதிகளுக்கு அருகில் வடக்கு பகுதியில் இது நகரக் கூடும் என்றும், இன்று மாலை இக் கடல் பகுதிகளில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் நிலவும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை, கடலூர், நாகை, எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் 5 ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. வட தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும், தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திருவள்ளூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மற்றும் வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. டிட்வா புயல் காரணமாக வட தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் பலத்த தரைக்காற்று மணிக்கு 60 முதல் 70 கிலோ மீட்டர் வேகத்திலும், வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என

வானிலை 2 (9)

எச்சரிக்கப்பட்டுள்ளனர். புதுச்சேரியில், டிட்வா புயல் காரணமாக தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் அரசு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, பேரிடர் மேலாண்மை துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் அவர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக லாஸ்பேட்டையில் அமைந்துள்ள அட்சய பத்ரா உணவு தயாரிக்கும் கூடத்தை இன்று மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன்

ஆய்வு செய்தார். முகாம்களில் சுமார் 400 க்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். டிட்வா புயல் குறித்த கூடுதல் தகவல்கள்.........

(வாய்ஸ்)

வானிலை 3 (14)

**வாய்ஸ்**

காரைக்கால் மாவட்டத்தில் டிட்வா புயல் காரணமாக கடந்த 2 நாட்களாக கனமழை மற்றும் பலத்த காற்று வீசி வருவதால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் சூழ்ந்து காணப்படுகிறது. இந்நிலையில், காரைக்கால் மாவட்டத்தில் புயல் மற்றும் மழை பாதிப்புகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு ஏ.எஸ்.பி.எஸ். ரவிபிரகாஷ் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில், மீட்பு பணிகள், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் நிலை, தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு பால் மற்றும் சத்தான பொருட்களை வழங்குவது, கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கண்காணிக்கப்படுவது, குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் காரைக்கால் சார்பு ஆட்சியர் செல்வி. பூஜா, துணை ஆட்சியர் திரு வெங்கடகிருஷ்ணன், தெற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு சுபம் சுந்தர் கோஷ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ரந்தீர் ஜெய்ஸ்வால் (9)

தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் திரு சிஹாசக் புவாங் கெட்கியோவ் 4 நாள் அரசு முறை பயணமாக இந்தியாவிற்கு வந்துள்ளார். அவரை, வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு ரந்தீர் ஜெய்ஸ்வால் சந்தித்து, இரு நாடுகளுக்கு இடையேயான நீடித்த நாகரீக உறவுகள் மற்றும் கூட்டாண்மையை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தார். இன்று புதுடெல்லியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் தாய்லாந்து அமைச்சர் நாளை ஐதராபாதில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

கிரிக்கெட் ()

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே நடைபெறும் 3 போட்டிகள் கொண்ட ஆடவர் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில்

தொடக்க ஆட்டத்தில்